நூலகம்
யாழ்ப்பாணம்
படிப்பகம்

பக்கங்கள் எட்டு

விலைரூபா 5·00

உள்ளே →
க. பொ. த.
சாதாரணதர
மாணவருக்கான
வரலாறும்
சமூகக்கல்வியும்
பகுதிII


# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 03 செவ்வாய்க்கிழமை ( 19-9-2000 ) தொ. பேசி;- 3378 ஒலி: 274


★ சாவகச்சேரிப்பகுதியில் 3-வது நாளாக

# இராணுவம் - புலிகள் கடும்மோதல்

# 18படையினர் பலி; 20பேர் காயம்!

## அரச தரப்பு தெரிவிப்பு

(நமது நிருபர்)

யாழ் குடாநாட்டில் தென்மராட்சி சாவகச்சேரிப் பகுதியைக் கைப்பற்று வதற்கு, சங்கத்தானையிலிருந்து இராணுவத்தினரால் ஆரம்பிக் கப்பட்ட இராணுவ நடவடிக்கையை எதிர்த்து விடுதலைப்புலிகள் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இத்தாக்குதல்களின் போது இராணுவத் தரப்பில் 18 பேர் கொல்லப்பட் டுள்ளதாகவும், 20 பேர் காயமடைந்ததாகவும் அரசதரப்புச் செய்தி கள் தெரிவித்தன.

சாவகச்சேரிப் பகுதியில் மூன்றாவது நாளாக நேற்று இடம்பெற்ற கடுமையான மோதலில் இரு தரப்பினர் மத்தியில் பெருமளவு சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று யுத்த முனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினரின் இந்த இராணுவ நடவடிக்கைக்கு உதவியாக 'மிக்' ரக யுத்த விமானங்களும், சண்டைக்கு ஈடுபடுத்தப்படும் எம். ஐ. 24 ரக ஹெலிகளும் வான்பரப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்த நிலையில் சடலங்கள்

அமைச்சர் அஷ்ரப் பயணம் செய்த ஹெலி விபத்துக் குள்ளான போது அதில் பயணம் செய்தவர்களில் இரு வர் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவிய படி கருகி உருக் குலைந்த நிலையில் காணப்பட்டதாக சம்பவத்தை நேரில் பார்வையிட்ட ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஹெலி விபத்தில் கொல்லப்பட்டவர்களின் சடலங் களை தேடிக் கண்டு பிடிக்கும் பணியில் ஈடுபட்டவர் களே ஒருவரை ஒருவர் தழுவிய நிலையில் சடலத்தைக் கண்டு பிடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் கொல்லப்பட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு பொருத்திய வாகனம் கல்முனையில் வெடித்துச் சிதறியது

### இரு பொலிஸார் உட்பட மூவர்பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு கல்முனையில் நேற்றுப் பிற்பகல் 3,45 மணி யளவில்வாகனத்தில்மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் மூவர் ஸ்தலத் தில் .கொல்லப்பட்டதாகவும் ஏழு பேர் காயமடைந்ததாக வும கல்முனைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்:

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: கல் முனை மணல் சேனைப் பகுதியில் பேக்கரி ஒன்றின் பின்னால் குண்டு மறைத்து வைக்கப்பட் டுள்ள வாகனம் நிறுத்தப்பட் டுள்ளதாக அம்பாறை நாச கார தடுப்புப் பொலிஸ் பிரி விலருக்குக் கிடைத்த தக வலை அடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் வாக னத்தைக் கைப்பற்றி அம்பா

(8ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர்களின் உண்ணாவிரதம் ஜேர்மனியில் தொடர்கிறது

(கொழும்பு)

ஜேர்மனியில் அகதி அந் தஸ்து நிராகரிக்கப்பட்ட நான்கு தமிழ் இளைஞர்க ளின் சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட் டத்திற்கு ஆதரவு தெரிவிக் கும் முகமாக நேற்று ஜேர் மனி வாழ் தமிழர்களால் சுழற்சி முறையிலான சத்தி யாக்கிரகப் போராட்டம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் இன்று புறப்படும்

பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்கான "சிற்றி ஒவ் றிங்கோ" பயணி கள் கப்பல் சேவை இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் அறி வித்துள்ளது.

இக் கப்பலில் பயணம் செய்வதற்கு பயண அனுமதி பெற்றவர்கள் இன்று காலை 7.30 மணிக்கு யாழ். சிங்கள மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு சிவில் நிர்வாகக் காரியாலயம் கேட் டுள்ளது. (வ-4)

## உரும்பிராயில் படையினர் சூட்டில் இளைஞர் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கொல்லப்பட்டவர் யாழ்.

## புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

நேற்று முன்தினம் ஓமாவி

## 'ஸ்ரிக்கர்' விவகாரம்குறித்து விசாரிக்க

# இளைஞர் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவிலடியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் யாழ். மாநகர சபையின் வேலை மேற்பார்வையாளராகக் கடமையாற்றும் இல 63/1, கோவில் வீதி நல்லூரைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவநாதன் (வயது 25) என்ப

[8ஆம் பக்கம் பார்க்க]

# படையினரால் 45 சடலங்கள் நேற்று ஒப்படைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் படையினர் ஆரம்பித்த யுத்த நடவடிக்கையின் போது படையினரால் கைப்பற்றப்பட்ட 45 சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி சடலங்களில் 21 பெண்களும் 24 ஆண்களும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இச்சடலங்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் இன்று மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ந-3-12

# ஹெலி விழுந்த இடத்தில் இரசாயனப் பகுப்பாய்வு

(கொழும்பு)

அமைச்சர் அஷ்ரப் பயணம் செய்த ஹெலி விபத்துக்குள்ளான அரநாயக்கா மலைப் பகுதிக்கு இரசாயன பகுப்பாய்வாளர்கள் சென்று பரிசோதனை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது:

விபத்து தொடர்பான முத்தரப்பு விசாரணைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ள போதும்எதுவிதமான தகவல்களும்கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

# ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

நேற்று முன்தினம் ஊளாவி பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்த வீர வேங்கை

● குகப்பிரியா (நிலகரி பேளிசுவேந்தினி) யாழ்ப்பாணம்

என்ற போராளி தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர். (ந)

பெறவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

சமூகமளிக்குமாறு சிவில் நிர்வாகக் காரியாலயம் கேட்டுள்ளது. (வ-4)

## 'ஸ்ரிக்கர்'விவகாரம்குறித்து விசாரிக்க

# மனித உரிமைகள் ஆணைக்குழு தேர்தல் ஆணையாளருக்கு அழைப்பு

(கொழும்பு)

வாக்காளர் அட்டைகளில் ஒட்டுவதற்காக தேர்தல் ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்ட 'ஸ்ரிக்கர்' விவகாரம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு முன் ஆஜராகுமாறு தேர்தல் ஆணையாளர் தயா

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்புத் துறைத் தாக்குதல் படை அதிகாரிகளிடையே முறுகல்

## விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது

(கொழும்பு)

இம்மாதம் 3ஆம் திகதி கொழும்புத்துறைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தாக்குதல் முற்கனவே திட்டமிட்டதற்கு மாறாக இடம் பெற்றுள்ளதாக படைத்தரப்பில் சர்ச்சை எழுந்துள்ளது.

இத்தாக்குதல் நடவடிக்கையில் அதிகளவு படையினர் உயிரிழப்பதற்கு இதுவே காரணமெனவும் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

கொழும்புத்துறையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் படைத்தளபதி முதலான பதவிகளைக்கூட இராஜினாமாச் செய்யும் அளவிற்கு நிலைமையை மோசமாக்கியதாக இராணுவ ஆய்வாளர்கள்தெரிவித்துள்ளனர்

இது தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொள்ள மேஜர் நீல்ரூடி. அல்விஸ் தலைமையில் பிரிகேடியர் லால் பெர்ணான்டோ, பிரிகேடியர் கோமான் றொட்ரூட் ஆகியோரை உள்ளடக்கிய இராணுவ விசாரணைக் குழுவொன்று அமைக்கப் பட்டு விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (ந)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வரி விளம்பரம்

### தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐஸ்கிறீம், கம்பனிக்கு ஐஸ்பழம், ஐஸ்கிறீம், விற்பனைக்கு சயிக்கிள், வான், வியாபாரிகள் உடன் தேவை தொடர்பு ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம் நீர்வேலி தெற்கு, சந்தசுவாமி கோயில் வடக்கு வீதி, TP No: 070 -212354, 070-212383, 070-212803

[1740]

ஸ்ரீ செல்வா

(யாழ்ப்பாணம்)

சரத்குமார் ரோஜா நடித்த

ஒருவன்

10-30-2.00பகல் மய நேரம்

(இ-688)


# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

செப்ரெம்பர் மாதம் 16-ம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது.

### சங்கானை

| | |
|---|---|
| 155361 ஏ | 155362 ஏ |
| 155363 ஏ | 155353 பி |
| 155363 சி | 158655 ஏ |
| 158769 ஏ | 158770 ஏ |
| 158966 பி | 158966 சி |
| 160724 ஏ | 160724 பி |
| 160724 சி | 160750 ஏ |
| 160750 பி | 160750 சி |
| 160759 ஏ | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 153163 ஏ | 153150 ஏ |
| 153150 பி | 153150 சி |
| 153150 டி | 153150 ஈ |
| 153163 பி | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 145528 ஏ | 142863 ஏ |
| 144663 ஏ | 144663 பி |
| 144663 சி | 144663 டி |
| 147824 ஏ | 147824 பி |
| 147824 சி | 147824 டி |
| 149922 ஏ | 152431 ஏ |

| | |
|---|---|
| 152431 பி | 152431 சி |
| 152488 ஏ | 152488 பி |
| 154055 ஏ | 156199 ஏ |
| 156199 பி | 156291 ஏ |
| 156357 ஏ | 156609 ஏ |
| 156609 பி | 156621 ஏ |
| 156621 பி | 156621 சி |
| 156621 டி | 156621 ஈ |
| 158989 ஏ | 158995 பி |
| 159024 ஏ | 159035 ஏ |
| 159060 ஏ | 159060 பி |
| 159060 சி | 159060 டி |
| 159060 ஈ | 159060எவ் |
| 159060 ஜி | 159069 ஏ |
| 159192 ஏ | 159399 ஏ |
| 159399 பி | 159399 சி |
| 1593 99 டி | 159399 ஈ |
| 159414 ஏ | 159414 பி |
| 159415 ஏ | 159415 பி |
| | 159415 சி |
| 160950 ஏ | 160950 பி |
| 160950 சி | 160950 டி |
| 160953 ஏ | 160953 பி |
| 160953 சி | 160953 டி |
| 161084 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 144910 ஏ | 144910 பி |
| 144972 ஏ | 144992 ஏ |
| 145331 ஏ | 145357 ஏ |
| 149883 ஏ | 149883 பி |
| 149883 சி | 150812 ஏ |

| | |
|---|---|
| 153157 ஏ | 153198 ஏ |
| 153198 பி | 154430 ஏ |
| 154430 பி | 154447 ஏ |
| 154473 ஏ | 154473 பி |
| 154487 ஏ | 154487 பி |
| 154487 சி | 154487 டி |
| 154505 ஏ | 154505 பி |
| 154505 சி | 154517 ஏ |
| 154520 ஏ | 154532 ஏ |
| 154571 பி | 154572 ஏ |
| 154572 பி | 154572 சி |
| 156804 ஏ | 156806 ஏ |
| 156806 பி | 157325 ஏ |
| 157393 சி | 157393 டி |
| 157393 ஈ | 157419 ஏ |
| 157419 பி | 147419 சி |
| 157419 டி | 157465 ஏ |
| 157465 பி | 157474 ஏ |
| 157487 ஏ | 157487 பி |
| 157488 ஏ | 157488 பி |
| 157488 சி | 157493 ஏ |
| 147493 பி | 157497 ஏ |
| 157655 ஏ | 159513 ஏ |
| 179695 ஏ | 159695 பி |
| 159695 சி | 159705 ஏ |
| 159733 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 140920 ஏ | 140933 ஏ |
| 141046 ஏ | 144987 ஏ |
| 144987 பி | 145034 ஏ |
| 145317 ஏ | 145333 ஏ |
| 145338 ஏ | 145345 ஏ |
| 145355 ஏ | 152410 ஏ |
| 152410 பி | 152411 ஏ |
| 156688 ஏ | 156703 ஏ |
| 156704 ஏ | 156713 ஏ |
| 156715 ஏ | 156731 ஏ |
| 156900 ஏ | 157428 ஏ |
| 157438 பி | 157428 சி |
| 157434 ஏ | 157456 ஏ |
| 157456 பி | 157467 ஏ |
| 157506 ஏ | 157506 பி |
| 157514 ஏ | 157514 பி |
| 157514 சி | 157514 டி |
| 157516 ஏ | 157517 ஏ |
| 157517 பி | 157519 ஏ |
| 157519 பி | 157519 சி |
| 157519 டி | 157519 ஈ |
| 157519 எவ் | 157521 ஏ |
| 157522 ஏ | 157523 ஏ |
| 157523 பி | 157524 ஏ |
| 157524 பி | 157532 ஏ |
| 157532 பி | 157533 ஏ |

| | |
|---|---|
| 157533 பி | 157533 சி |
| 157533 டி | 157540 ஏ |
| 157602 ஏ | 157602 பி |
| 157616 ஏ | 157628 ஏ |
| 157648 ஏ | 157648 பி |
| 144241 ஏ | 144241 பி |
| 144241 சி | 148218 ஏ |
| 148218 பி | 148218 சி |
| 148218 டி | 154193 ஏ |
| 154193 பி | 154243 ஏ |
| 156323 ஏ | 156323 பி |
| 156323 சி | 156337 ஏ |
| 156337 பி | 156337 சி |
| 156337 டி | 156474 ஏ |
| 156474 பி | 156534 ஏ |
| 156534 பி | 156534 சி |
| 156608 ஏ | 156608 பி |
| 156659 ஏ | 156659 பி |
| 156659 சி | 156659 டி |
| 156659 ஈ | 156685 ஏ |
| 158995 ஏ | 159168 ஏ |
| 159168 பி | 159168 சி |
| 159168 டி | 159231 ஏ |
| 159294 ஏ | 159294 பி |
| 159329 ஏ | 159329 பி |
| 159330 ஏ | 159354 ஏ |
| 159442 ஏ | 159454 ஏ |
| 160976 ஏ | 161010 ஏ |
| 161010 பி | 161070 ஏ |
| 161070 பி | 161070 சி |
| 161070 டி | 161078 ஏ |
| 161078 பி | 161078 சி |
| 161101 ஏ | 161101 பி |
| 161101 சி | 160914 ஏ |
| 161526 ஏ | 161526 பி |
| 161526 சி | 161538 ஏ |

### பருத்தித்துறை

140932 ஏ

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 160588 ஏ | 144097 ஏ |
| 144097 பி | 144097 சி |
| 151979 ஏ | 155114 பி |
| 155114 சி | 155114 டி |
| 158596 ஏ | 158740 ஏ |
| 159740 பி | 158740 சி |
| 158906 ஏ | 158907 ஏ |
| 158907 பி | 158907 சி |
| 160489 ஏ | 160489 பி |
| 160489 சி | 160538 பி |
| 160543 ஏ | 160596 பி |
| 160596 சி | 160675 ஏ |
| 160727 ஏ | 160727 டி |
| 160727 சி | 160727 பி |
| 160727 ஈ | |

(7ஆம் பக்கம் பார்க்க)


## வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி

# கேள்வி அறிவித்தல் - 2000

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கேள்விகள் எதிர்வரும் 02-10-2000ம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் அன்றைய தினமே பிற்பகல் 2.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை, 'தவிசாளர், வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி'' என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை, ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் எதிர்வரும் 02-10-2000ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

| இல | வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப்பணம் |
|---|---|---|---|
| 01. | உரும்பிராய்சிவன்வீதி திருத்ததொடர்வேலை | 1500.00 | 250.00 |
| 02. | ,, இந்துக்கல்லூரி வீதி திருத்த ,, | 2500.00 | 500.00 |
| 03. | பொன்னுத்துரை வீதி திருத்தம் | 1500.00 | 250.00 |
| 04. | அச்சுவேலி கலாநிதி பாலர் பாடசாலை தளபாடம் செய்தல் | 150.00 | 150.00 |
| 05. | தம்பாலை சிறீமுருகன் சனசமூக நிலைய வீதி திருத்தம் | 500.00 | 250.00 |
| 06. | அச்சுவேலி தென்இந்திய திருச்சபை பாலர் பாடசாலை விளையாட்டு உபகரணம் செய்தல் | 250.00 | 150.00 |
| 07. | அச்சுவேலி சலவைத் தொழிலாளர்களின்கிணறும், தொட்டியும் திருத்தம் செய்தல் | 750.00 | 250.00 |
| 08. | விநாயகர் வீதி திருத்தம் | 1500.00 | 250.00 |

மேற் குறிப்பிட்ட வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 29.09.2000ம் திகதி பி.ப. 12.30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி
15-09-2000

பூ. குணசிங்கம், ஜே. பி. யு. எம்,
தவிசாளர்

(கி/799)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை

# கூறுவிலை கோரல்


## மின் இணைப்பு

வடபிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில் சாலையிலுள்ள கட்டடங்களுக்கு மின் இணைப்பு வேலைகள் செய்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. ''03 பேஸ்'' மின்இணைப்புப் பொருத்துவதில் அனுபவமுள்ள ஒப்பந்தகாரர்கள் கூறுவிலைப் படிவங்களை ரூபா 100/- செலுத்தி வ.பி.போ. சபையின் சிவில் பொறியியல் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வேலைக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். கூறுவிலைப் படிவங்கள் 26-09-2000 ம் வரை விநியோகிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட படிவங்கள் 28-09-2000 — மாலை 4-00 மணி வரை கூறுவிலை சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

வி. எஸ். சொக்கலிங்கம்
பொது முகாமையாளர்
வ.பி.போ. சபை.

(இ/800)



மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்திற்காகவும்
வாக்களிப்போம்!

தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்



த. சுபத்திரன் (றொபேட்)

அ. வரதராஜப் பெருமாள்

03

சுயேச்சைக்குழு -- 2
(ஈ. பி. ஆர். எல்.எவ்.ப்)



X

01

[1744]

# எமக்கும் இறைவனுக்கும் பாலமாக அந்நியமொழி அமைவதுசரிதானா?

## - யாழ். மத்திய கல்லூரி அதிபர்

(அச்சுவேலி)

ஆகம விதிமுறைகளுக்கமைய சமஸ்கிருத மொழியில் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதில் காட்டுகின்ற ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் எமது தாய்த்தமிழ் மொழியில் வழிபாடு நடத்தவேண்டும் என்பதற்காய் காட்ட வேண்டும்.

எமக்கும் இறைவனுக்கும் இடையேயான இணைப்பில் அந்நிய மொழியொன்று பாலமாய் அமைவது சரிதானா? இவ்வாறு யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை கேள்வியெழுப்பியுள்ளார்.

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக்கந்தசுவாமி கோவில் பிரதம பூசகர் சி.சிவகுருஐயரின் பவளவிழா நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ் மொழியில் பூசைவழிபாடுகள் இடம்பெறுவது தொடர்பாக இந்தியாவில் புத்தெழுச்சியொன்று உருவாகியுள்ளது.

இங்கு அது செயல்வடிவம் கொண்டிருப்பது பாராட்டுதற்குரியது.வெறும் பேச்சளவில் இல்லாது,எமது சமய வளர்ச்சிக்காகவும்-அதன் மகத்துவத்தினையும்,சிறப்பினையும் வெளிக்கொணரும் முகமாகவும் தாய்மொழியில் பூசைவழிபாடு செய்வது தொடர்பான நல்நிலைப்பாட்டினை வெகு விரைவில் எடுக்க வேண்டிய அவசியம் உண்டு என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இந்துசமய பண்பாட்டு பேரவையின் செயலாளர் சக்திகிரீவன் தனது உரையில் தமிழர்தம் பண்பாட்டு விழுமியங்களை கட்டிக் காக்க வேண்டிய ஆலயங்களே, நீதிமன்றத்திற்குச்சென்று பிணக்குகளை தீர்க்கும் நிலை உருவாக இந்துக்களாகிய நாம் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

அவ்வாறான செயல்கள் இடம் பெறுமாயின்.அது சமயத்தினது மட்டுமன்றி சமூகத்தினதும் முற்றுமுழுதான வீழ்ச்சிக்கு வழிகோலும்.

இவ்வாறான நிலை மாற, நாட்டுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து சமயப் பெரியார்தம் நல்லாசியுடன் அவர்கள்ஒழுக்வழி கற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

உடுவில் பிரதேச செயலர் மகாலிங்கம் பாராட்டுரை வழங்குகையில்,

எமது சமய கோட்பாடுகளின் உண்மைத்தன்மையறிந்து.அதன்வழி பிறழாது ஒழுக வேண்டும.

எமது சமயம் அநாதியானது என்று கூறி அதற்கான ஆதாரங்களை எடுத்துக்கூறுவது மட்டும் சமய வளர்ச்சிக்கு காரணமாக அமைய மாட்டாது.

ஆலயங்களைவிளை கேளிக்கை நிலையங்களாகப் பயன்படுத்துவதை விடுத்து, உண்மைக்கும் நேர்மைக்கும், வாழ்வின் உயர்வுக்கும் வழி காட்டும் தலங்களாகப்பயன்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (உ-14)

# மின்னிணைப்பு பயிற்சி வகுப்பு அடுத்த மாதம் 2 ம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் மின் இணைப்புப் பயிற்சி வகுப்பு அடுத்த மாதம் 2 ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இலவசமாக நடத்தப்படும் இப் பயிற்சிவகுப்பில் க.பொ.த. (சா/த)தரம் வரை படித்தவர்கள் பங்குபற்றலாம். இப் பயிற்சி வகுப்பு ஆறு மாதங்கள் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி வகுப்பில் கற்க விரும்புபவர்கள் தங்கள் பெயர்களை, அராலி வடக்கு கிராமிய தொழிற் பயிற்சி நிலையத்தில் பதிவு செய்யுமாறு தெரிவிக்கப்படுகின்றது. (செ)

# தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு நேற்றுவரை 287 சம்பவங்கள் பதிவு

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் 10 ம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கு மனுத் தாக்கல் செய்தபின் கடந்த16 ம் திகதி வரை 287 தேர்தல் வன்முறைகள் பதிவு செய்யப்பட்டுளளது.

நேற்றைய தினம் மாத்திரம் 33 தேர்தல் வன்முறைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் பொதுஜன ஐக்கிய முன்னணி பதினொரு முறைப்பாடுகளையும், ஐக்கிய தேசியக் கட்சிபதினொரு முறைப்பாடுகளையும், மக்கள விடுதலை முன்னணி இரண்டு முறைப்பாடுகளையும், ஈழ மக்கள் விடுதலை முன்னணி மூன்று முறைப்பாடுகளையும் பதிவு செய்துள்ளது.

இவ்வாறு தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளதாக செய்தி ஊடகம் ஒன்று அறிவித்துள்ளது. (செ)

# இனப்பிரச்சினை தீர்வு பேச்சுவார்த்தை மூலமே ஏற்படவேண்டும் ஓர்க் மார்க் ஆய்வின் கணிப்பீடு இது

யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் பெரும்பான்மையான மக்கள் ஆர்வம் கொண்டிருப்பதாக கருத்துக்கணிப் [illegible]

கம் செப்ரெம்பர் 2 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஆயிரத்து 299 பேர் மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்றும் மேற்படி முடிவு பெறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# ஈ.பி.டி.பி. யின் தேர்தல் பிரச்சாரம் சுழிபுரத்தில் சனியன்று ஆரம்பம்

(மூளாய்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் கடந்த சனிக்கிழமை பி.ப 4.30 மணியளவில் சுழிபுரத்தில் நடைபெற்றது.

வழக்கம்பரை அம்மன் ஆலயவீதியில் உள்ள மோகன் திறந்த வெளியில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு ஈ.பி.டி.பி.யின் வட்டுக்கோட்டை அமைப்பாளரும், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவருமான என் திரிலோகநாதன் தலைமைவகித்தார் இக்கூட்டத்தில் ஈ.பி.டி.பி. யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கே.ஜோன், சிவதாசன் மற்றும் சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டனர். (ந-113)

# 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் தபால்மூல வாக்களிப்பிற்கு தகுதி

## உதவித் தேர்தல்ஆணையர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 2 லட்சத்து 50 ஆயிரத்து 172 பேர் தகுதி பெற்றிருப்பதாக உதவித் தேர்தல் ஆணையாளர் சே. சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் எதிர்வரும் 29-ம் 30-ம் திகதியில் வாக்களிக்க முடியும் எனவும் அதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 28 ஆயிரத்து 825 பேரின் தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-2)

# காணாமல் போவோர் தொடர்பாக தேசிய தினம் பிரகடனம்

[கொழும்பு]

காணாமல் போனவர்கள் தொடர்பாக அல்லது நபர்கள் காணாமற் போகின்றமைக்கு எதிராக தேசிய தினம் ஒன்று பிரகடனப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஒக்டோபர் மாதம் 27-ம் திகதி இதற்குப் பொருத்தமான தினம் என்று காணாமற்போனோர் தொடர்பான அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வாறான செயற்பாடு நபர்கள் காணாமற் போகின்றமைக்கு எதிராக பரவலான கருத்தொற்றுமையை ஏற்படுத்த உதவும் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

# பொது மக்கள் பார்வைக்காக விஞ்ஞான தொழில் நுட்ப புகையிரதம்

(கொழும்பு)

விஞ்ஞான தொழில் நுட்ப புகையிரதம் ஒன்று காட்சிக்காக அம்பலாங்கொட புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான மற்றும்தொழில் நுட்பத்துறை அமைச்சின் ஏற்பாட்டிலேயே இப்புகையிரதம் பொது மக்கள் பார்வைக்காக இப்புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த புகையிரதத்தினை பெருமளவு மக்கள் பார்வையிட்டு வருவதாகவும் இப் புகையிரதம் பல்வேறு இடங்களிலும் பார்வைக்கு நிறுத்தி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ)

# யாழ்.மா.பே.உ.சங்க9 ஆம் ஆண்டுநிறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினர் இன்று ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுகின்றனர்.

[illegible] நடைபெறுமென தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சங்க நிறைவாண்டை ஒட்டி சங்க உறுப்பினர்களுக்கிடையே விளையாட்டுப் போட்டி அண்மை [illegible]

யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் பெரும்பான்மையான மக்கள் ஆர்வம் கொண்டிருப்பதாக கருத்துக்கணிப்பொன்று தெரிவித்துள்ளது.

ஓர்க் மார்க் எஉற ஆய்வு நிலையம் நடத்திய தேர்தல் கணிப்பொன்றின் மூலம் மக்களின் இவ் ஆர்வம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

47 சதவீதமான மக்கள் வடக்கு-கிழக்குபிரச்சினைக்கு சமாதான தீர்வுகாண்பதனை அதுவும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக் காலத்தில் இவ்வாறான தீர்வுகாணப்பட வேண்டும் என்பதில் விருப்பம் கொண்டிருப்பதாகவும் அவ் கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் 30ஆம் திகதிதொடக்கம் செப்ரெம்பர் 2 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஆயிரத்து 299 பேர் மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்றும் மேற்படி முடிவு பெறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## சிறியரக மின் நிலையங்கள்

சப்ரமுவா மாகாணத்தில் சிறியளவில் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக 364 பிரதேச சபைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதிக நீர் வளத்தைக் கொண்ட இப் பிரதேசத்தில் இருந்து 18000 கிலோவாற்று அளவில் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (க)

கேளிக்கை நிலையங்களாகப் பயன்படுத்துவதை விடுத்து, உண்மைக்கும் நேர்மைக்கும், வாழ்வின் உயர்வுக்கும் வழி காட்டும் தலங்களாகப்பயன்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (உ-14)

## வரவேற்பு உபசார விழா

(செம்பியன்பற்று)

பலாலி ஆசிரியர் கலாசாலை முதலாம் வருட ஆசிரிய மாணவர்களிற்கான வரவேற்பு உபசார விழா இன்று செவ்வாய்கிழமை காலை 9.00 மணிக்கு கலாசாலை சுப்பிரமணிய மண்டபத்தில் மாணவ முதல்வர் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ-42)

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினர் இன்று ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுகின்றனர்.

இவ்விழா பிரதான வீதியில் அமைந்துள்ளசங்கத்தலைமையகத்தில் காலை 10மணிக்கு நடைபெறுமென தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சங்க நிறைவாண்டை ஒட்டி சங்க உறுப்பினர்களுக்கிடையே விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றதுக் குறிப்பிடத்தக்கதாகும். (க-3)

## சட்டவிரோத ஆயுத தொழிற்சாலை பொலிஸாரால் திடீர் முற்றுகை

[கொழும்பு]

சட்ட விரோதமாக ஆயுதங்களை உற்பத்தி செய்யும் ஆயுதத் தொழிற்சாலையொன்று ராகம பொலிஸாரால் திடீரென முற்றுகைக்குள்ளாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மகரகம சிறைச்சாலை வீதியில் அமைந்துள்ள இவ் ஆயுதத் தொழிற்சாலையில் பிஸ்ரல் துப்பாககி, ரவைகள் ஆயுதங்களைத் தயாரிக்கும் இயந்திரங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-02)


விவசாயிகள் ஐக்கியப்பட வேண்டும்
அனைவரும் ஸ்தாபன மயப்படுத்தப்பட வேண்டும்
விளைபொருட்களுக்கு உச்ச விலைகளும்
பரந்தளவிலான சந்தை வாய்ப்புகளும்
உறுதிப்படுத்தப்பட வேண்டும்
விவசாயிகளின் இவ்வெண்ணங்கள் ஈடேறி,
வாழ்க்கைத்தரம் உயர
எம்மை ஆதரித்திடுவீர்.

X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம் ஜனநாயக மக்கள் விடுதலைமுன்னணி

(1689)

(புளொட் + ஈரோஸ்)

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## வரலாறும் சமூகக்கல்வியும்

**மாதிரி வினாத்தாள் 3 பகுதி - II**

ஆக்கம்: இரா. கணேசானந்தன்

(ஆசிரியர்: யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்.நெடுந்தீவு)

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1) A—நகர்புறச் சனத்தொகை அளவு அதிகமாக இருத்தல்
B—சிசுமரண வீதம் உயர்வாக இருத்தல்
C—அரசியல் அமைதியின்மை காணப்படுதல்
D—மூலதன அளவு அதிகமாகக் காணப்படுதல்
E—சர்வதேச வர்த்தகத்தில் சாதகமற்ற வர்த்தக நிலுவை காணப்படுதல்
F—கலாசாரம் விரைவாகச் சீர்கெடல்.

1) மேற்கூறப்பட்ட A முதல் F வரையிலான கூற்றுக்களில் அபிவிருத்தி அடையும் நாடுகளுக்குப் பொருந்தமான கூற்றுக்களை எழுதுக? (03 புள்ளிகள்)

2) அபிவிருத்தியை அளவிடப் பயன்படுத்தப்படும் நவீன குறிகாட்டிகள் நான்கு எவை? (04 புள்ளிகள்)

3) தற்போது அபிவிருத்தி அடைந்த நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டைக் கூறி விளக்குக? (05 புள்ளிகள்)

4) தற்போது பெற்றோலியத்தின் விலை விரைவாக உயர்வடைந்துள்ளது எனக் கூறப்படுகின்றது. இது உலக நாடுகளைப் பெரிதும் பாதித்துள்ளது'' இதனால் அபிவிருத்தி அடையும் நாடுகள் மீது ஏற்படுத்தும் தாக்க விளைவுகள் இரண்டினைக் கூறி விளக்குக? (06 புள்ளிகள்)

2) ஈபிகோல் என்பவர் மனித செயற்பாடுகளுக்கும் பௌதீக அம்சங்களுக்கும் முக்கியத்துவம் அளித்து உலகினைப் பன்னிரு வலயங்களாக வகைப்படுத்தி உள்ளார்?

1) ஈபிகோல் என்பவர் யப்பானும் அயல்நாடுகள் என்ற வலயத்தில் யப்பான் தவிர வேறு எவ் நாடுகளைச் சேர்த்துள்ளார்? (03 புள்ளிகள்)

2) யப்பானும் அயல் நாடுகளும் என்ற வலயத்திற்குப் பொதுவான தன்மை அளிக்கும் இலட்சணங்கள் அல்லது இயல்புகள் நான்கு எவை? (04 புள்ளிகள்)

3) 'தென் ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது யப்பானும் அயல் நாடுகளும் என்ற வலய நாடுகளின் மக்களது வாழ்க்கைத்தரம் உயர்வாக உள்ளது' இதை வலியுறுத்தும் காரணிகள் இரண்டினைத் தந்து விளக்குக? (05 புள்ளிகள்)

4) 'மத்திய கிழக்கும் வடஆபிரிக்கா' என்ற வலயத்தில் அடங்கும் நாடுகள் பெற்றோலிய ஏற்றுமதி மூலம் உயர் வருமானம் பெறுகின்ற போதும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளாகவே (இஸ்ரேல் நீங்கலாக) கருதப்படுகின்றன இதனை இரண்டு காரணிகளின் உதவியுடன் விளக்குக? (06 புள்ளிகள்)

3) 'கடம்பன்' என்ற மாணவன் தனது பாடசாலைச் சுற்றுலா ஒன்றின் போது முறையே இரத்தோட்டை கிங்குரானை களனி ஆகிய தொழிற்சாலைகளைப் பார்வையிட்டார்.

1) கடம்பன் ஒழுங்கு முறையாகப் பார்வையிட்ட இடத் தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்களை முறையே அவ் இட ஒழுங்கிற்கேற்ப எழுதுக? (03 புள்ளிகள்)

2) கைத்தொழில்சாலையின் அமைவிடத்தினை நிர்ணயிக்கும் நான்கு காரணிகள் எவை? (04 புள்ளிகள்)

3) இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்திக்குத் தடையாக உள்ள காரணிகள் இரண்டினைக் கூறி அவற்றினைத் தனித் தனியாக விளக்குக? (05 புள்ளிகள்)

4) 'இலங்கைக்கு விவசாய மூலப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிற்சாலைகளை அமைப்பது ஓர் பொருத்தப்பாடான செயல் ஆகும்'' இக் கூற்றினை இரண்டு காரணிகளின் உதவியுடன் விளக்குக? (06 புள்ளிகள்)

4) 1) இருபக்க வர்த்தகம் என்றால் என்ன? (03 புள்ளிகள்)

2) 'இன்றைய உலகில் எந்தவொரு நாடும் தனித்து வாழ முடியாதுள்ளது' இதற்கு ஏதுவான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

3) 'சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் சாதகமற்ற பாதகமான நிலையையே அனுபவிக்கின்றன'' இரண்டு காரணிகளின் உதவியுடன் இக் கூற்றினை விளக்குக? (05 புள்ளிகள்)

4) சர்வதேச வர்த்தகம் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு அதிக சாதகமாக அமைந்திருப்பதற்கான இரண்டு காரணங்களைத் தந்து விளக்குக? (06 புள்ளிகள்)

# திருட்டில் சில தந்திரங்கள் இணுவில் மேற்கில் சம்பவம்

(மல்லாகம்)

இணுவில் மேற்குப்பகுதியில் நடமாடும் திருடர்கள் சில தந்திரோபாயங்களைக் கையாளுகிறார்கள்.

அண்மைக்காலமாக இப்பகுதியில் விசேட நிகழ்வுகள் நடைபெறும் வீடுகளுக்குள் தந்திரமாக உட்சென்று அங்கிருக்கும் பெறுமதி வாய்ந்த தங்கநகைகள், உடைகள், ரொக்கப் பணம் என்பவற்றை அபேஸ் செய்து கொண்டு மாயமாக மறைந்து விடுகிறார்கள்.

இதனால் இப்பகுதி மக்கள் மிகுந்த அதிருப்திக்கு உள்ளாகியுள்ளனர். [செ-ப-14]

# முஸ்லிம் சமூகத்தின்தேவைகளை முழுஉலகிற்கும் பரப்பியவர் அஷ்ரப்

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளையும், தேவைகளையும் முழுசர்வதேச உலகிற்கும் அறிமுகப்படுத்திய பெருந்தகை மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்கள், அன்னாரின் திடீர்மரணத்தால் முழு நாடுமே நிலைகுலைந்து நிற்கின்றது. இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட சம்மேளனம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது:

தலைமைத்துவத்தின் கட்டுக்கோப்பான வழிகாட்டலுக்கு முழுஉலகிலுமே நல்லதொரு எடுத்துக்காட்டாக தலைவர் அஷ்ரப் விளங்கினார். யாரெல்லாம் இனவாதம்பேசுகிறார் என்று விமர்சித்தார்களோ, அவர்களெல்லாம் தலைவராக ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு அரசியலில் தூய்மைநிறைந்தவராக வாழ்ந்தார்.

தனியான அரசியல்வாதியாகஇல்லாது, சமூகத்தின் உணர்வுகளை உள்வாங்கிய கவிஞனாகஇருந்து, தலைவனாக மாறியதால் ஒவ்வொரு தனிமனிதனினதும், சமூகத்தினதும் உணர்வுகளைப் புரிந்து செயற்பட்டார்என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேலும் 5 ஆயிரம் மாணவருக்கு புலமைப் பரிசில் வழங்கப்படும்

## ஊழியர் நம்பிக்கை நிதியம் நடவடிக்கை

(கொழும்பு)

ஊழியர் நம்பிக்கை நிதியம் கடந்த 98 ஆம், 99 ஆம் ஆண்டுகளில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பேற்ற மேலும் 5000 மாணவர்களிற்கு புலமைப்பரிசில்களை வழங்கவுள்ளது.

மேற்படி நிதியத்தில் அங்கம் வகிக்கும் பெற்றோர்களின் பிள்ளைகளிற்கு இந் நிதித்திட்டம் வழங்கப்படும்.

இந்நிதித்திட்டம் மாவட்ட மட்டத்திலும் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஒவ்வொரு மாணவர்களுக்கும் 10,000 ரூபா பெறுமதியான பரிசுத்தொகை வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்கள் பெற்றோரிடமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்கள் யாவும் அடுத்த மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படும்.

இவ்விண்ணப்பங்களை நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக இந்நிதிய அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது; (வ-த)

# அறவழி முன்பள்ளிகள் சீரிய பணியாற்றுகின்றன

## கிராமஅலுவலர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

எமது சமுதாயத்தின் எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்குகின்ற சீரியபணியில் அறவழி முன்பள்ளிகள் மிகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை ஆற்றிவருவது பாராட்டப்பட வேண்டிய தினர் தொடர்ந்து பேசுகையில்,

சிங்கைநகர் கிராமத்தில் தற்போது தஞ்சம்புகுந்திருக்கும் இடம்பெயர்ந்த பாலர்களையும் இப்பூங்காவில் இணைந்துள்ளமை நல்லசெயலாகும். இத்திட்டம் கடந்த

விளக்குக. (05 புள்ளிகள்)

4) சர்வதேச வர்த்தகம் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு அதிக சாதகமாக அமைந்திருப்பதற்கான இரண்டு காரணங்களைத் தந்து விளக்குக? (06 புள்ளிகள்)

05) ஜனநாயக நாடொன்றில் வாழும் பிரஜைகள் அனுபவிக்கும் சில பிரதான உரிமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A — தான் விரும்பிய சமயத்தைப் பின்பற்றுதல்
B — தான் விரும்பிய தொழிலைச் செய்தல்
C — அரசியற் கூட்டங்களை நடத்துதல்
D — தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடல்
E — தனிப்பட்ட விதத்தில் சொத்துச் சேர்த்தல்
F — தொழிலுக்கேற்ற ஊதியம் பெறுதல்

1) மேலே உள்ள பட்டியலிருந்து பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்ட மூன்று உரிமைகளை எழுதுக? (03 புள்ளிகள்)

2) கி.பி 1978 ஆம் ஆண்டு ஜனநாயக சோஸலிசக் குடியரசு யாப்பின் படி 'ஜனாதிபதி'க்கு உள்ள அதிகாரங்கள் நான்கு எவை? (04 புள்ளிகள்)

3) ஜனநாயக நாடொன்றில் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதில் பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் பெறக்கூடிய பயன்கள் யாவை என்பதனை அச்சாதனங்கள் இரண்டின் துணையுடன் விளக்குக? (05 புள்ளிகள்)

4) ஜனநாயக நாடொன்றில் அதன் வெற்றிற்கு சட்டசபையில் பலமான எதிர்க்கட்சி இருக்க வேண்டியது அவசியமானதாகும்'' இக் கூற்றினை இரண்டு காரணிகளின் துணையுடன் விளக்குக? (06 புள்ளிகள்)

06) 1) தரப்பட்டுள்ள நிரல் 1 இனையும் நிரல் 2 இனையும் கருத்திற் கொண்டு A, B, C என்ற நிரல் 1 இன் ஒழுங்கிற் கேற்ப நிரல் இரண்டின் ஒழுங்கு யாது?

| நிரல் 1 | நிரல் 2 |
|---|---|
| A — விமானப் போக்குவரத்து | செய்மதி |
| B — செய்தித் தொடர்பு | பெற்றோலியம் |
| C — வெப்பமின் சக்தி | சுதந்திர வர்த்தக வலயம் |

(03 புள்ளிகள்)

2) தேசிய கப்பல் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டமையினால் ஏற்பட்ட மிக முக்கியமான பொருளாதார நன்மைகள் நான்கு எவை? (04 புள்ளிகள்)

3) இலங்கையின் வீட்டுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் முக்கிய சக்தி மூலமாக அமையும் விறகினை ஏன் வீண் விரயம் செய்யாது பயன்படுத்த வேண்டும். என்பதை இரண்டு காரணிகள் தந்து விளக்குக? (05 புள்ளிகள்)

4) 'ஒரு சக்தி மூலம் என்ற வகையில் நீர்மின்வலுவை பயன்படுத்துதல் இலங்கைக்கு பொருத்தமானது ஆகும்' இக் கூற்றினை ஏற்றுக் கொள்ளுகின்றீரா? உமது விடைக்கான காரணங்கள் இரண்டினைத் தந்து விளக்குக? (06 புள்ளிகள்)

அறவழி முன்பள்ளிகள் மிகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை ஆற்றிவருவது பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

இவ்வாறு சிங்கைநகர் அறவழிமழலைகள் கல்விப்பூங்காவின் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்ட கிராமசேவை அலுவலர் வி. கே. சண்முகநாதன் உரையாற்றும்போது தெரிவித்தார்.

நிறுவனத்தின்தலைவர் வி. ஜி. தங்கவேல் ஜே. பி. தலைமையில் நடைபெற்ற இப் போட்டியில் பிரதமவிருந்தும் இடம்பெயர்ந்த பாலர்களையும் இப்பூங்காவில் இணைந்துள்ளமை நல்லசெயலாகும். இத்திட்டம் கடந்த 20 வருடங்களாக இங்கு நல்ல சேவைகளைச்செய்து வந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் வடமராட்சி கல்விக்கோட்டப் பொறுப்பாளர் எஸ். சத்தியசீலன் மற்றும் அறவழியின் நிதித்துறை இயக்குனர் கா. செல்வச்சோதியும் உரையாற்றினர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற பாலர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கினர். (ச-77)

# ஸ்ரீ. மு. காங். 'பொலிட்பீரோ' கூட்டத்தில் பெரும் அமளிதுமளியாம்!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ்தலைவர் அமைச்சர் அஷ்ரப்பின் மரணத்தை தொடர்ந்து மேற்படி கட்சிப் பிரமுகர்களிடையே மோதல் நிலை உருவாகிவருகிறது.

மேற்படி கட்சியின் 'பொலிட்பீரோ' கூட்டம் நேற்றுமுன்தினம்கொழும்பில் கூடியபோது பலத்த தாக்குதல்சம்பவம் இடம்பெற்றதாகவும், பத்திரிகையாளர்கள் மற்றும் வீடியோக்காரர் படுமோசமாக தாக்கப்பட்டனர்என்றும் பதற்றநிலையை தணிக்க பொலிஸார் ஆகாயத்தைநோக்கி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காலை 10.00 மணிமுதல் மாலைவரை இக்கூட்டம் நீடித்ததாகவும் மேலும் அறியப்படுகிறது.

கட்சித்தலைமைத்துவம் தொடர்பாக அஷ்ரப்பின் மனைவியான பேரியல் அஷ்ரப்பிற்கும், கட்சிப்பிரமுகர் ராவூப் ஹக்கிமிற்கும் இடையில் பலத்தபோட்டி நிலவுவதாகவும் கட்சிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க)

## இன்று ஒரு தகவல்

# தனக்குவரும்பொழுது தான் விளைவுதெரியும்

தீபன் மூன்றாம் ஆண்டு படிக்கும்மாணவன். ஒருநாள் அவன் கிளி ஒன்றைப்பிடித்து வந்தான். அதைக்கூட்டில் அடைத்து வளர்க்கலானான்.

இதைக்கண்ட தீபனின் தாய் ''மகனே! கிளியைக் கூண்டில்அடைத்து வளர்க்கக் கூடாது அதுபாவம்'' என்று சொன்னாள்.

ஆனால் தீபன் அதைக்கேட்கவில்லை. இதைக்கண்ட தீபனின்தாய் 'பாவம்இந்தக் கிளி. இது தன்பெற்றோரைப் பிரிந்துவருந்தும். பேசாமல் கூட்டைத்திறந்து கிளியை விட்டுவிடு! என்றுசொன்னாள்.

அதற்குத்தீபன் அம்மா கிளிக்கு இங்கே என்னகுறைச்சல்? சாப்பிடுவதற்கு நல்ல பழம், குடிப்பதற்குநீர் இளைப்பாறுவதற்கு நல்லஊஞ்சல் இந்தக்கூண்டில் உள்ளது; துணைக்கு நான் இருக்கின்றேன். இது போதாதா? என்றுசொன்னான்.

தீபனின்தாய் அதற்கு ஒன்றும்சொல்லாமல் சென்றுவிட்டாள். சில நாட்கள் கடந்தன. அன்று ஞாயிற்றுக்கிழமை தீபன் நன்றாக தூங்கிக்கொண்டிருந்தான். அவனது தூக்கத்தைக் குழப்பாமல் ஒருதட்டில் காலைச் சாப்பாடு, பால் எல்லாவற்றையும் வைத்துவிட்டு சந்தைக்குச் சென்றுவிட்டாள் அவன்தாய், ஒருமணிநேரம் கழித்து சந்தையிலிருந்து தீபனின்தாய் திரும்பிவந்தாள் அப்போது தீபன் அழுது கொண்டிருந்தான்.

தீபனின்தாய் ஓடிவந்து கதவைத்திறந்ததும் தாயைக் கட்டிப்பிடித்து அழுதான் 'ஏனம்மா என்னைத்தனியாகவிட்டு, வீட்டைப்பூட்டிவிட்டுப் போனீர்கள்' என்று கேவியபடிகேட்டான் தீபன்.

அதற்கு அவனது தாய் அதனால்என்ன? உனக்குத்தான் காலைச்சாப்பாடு பால் எல்லாம் வைத்துவிட்டுப் போனேன். விளையாடவிளையாட்டுச்சாமன்கள்எல்லாம் இருக்கிறது; துணைக்கு உன் கிளிகூட இருக்கிறது இது போதாதா? என்று கேட்டாள்.

இவ்வளவுஇருந்தும் என்னுடன் நீங்கள் இல்லாமல் இந்த வீட்டிற்குள் அடைந்துகிடக்க என்னால்முடியாது. அம்மா என்றான் தீபன்.

'பார்த்தாயாமகனே! உன்னைப்போலத்தானே இந்தக் கிளியும். அதனுடைய பெற்றோர் இல்லாமல் கூண்டில் அடைபட்டுக்கிடக்க எவ்வளவு வேதனையாகஇருக்கும் என்று சொன்னாள் தீபனின் தாய் தீபனிற்கு அப்போது தான். தான் செய்த தவறு புரிந்தது கிளிக்கூண்டை வெளியே தூக்கிக்கொண்டு போய்க் கூண்டைத்திறந்தான். கிளி சந்தோஷமாக சிறகடித்துப் பறந்துசென்றது.

தீபனின்தாய் அவனை வாரிஅணைத்து முத்தமிட்டாள்.

எப்போதும் நாம் மற்றவருக்கு செய்யும் செயல்கள் எமக்கு நியாயமாகப் படும் ஆனால் அதனைஎமக்கு மற்றவர்கள் செய்கின்றபோது தான் அதன்விளைவுகள் புலப்படும் எம் மனமும் அதனை உணரும்.

- பாப்பாமுரசு -

---

செல்வச் சந்நிதி ஆலய தேரை

# அரசாங்கம் புனரமைக்காவிட்டால் உண்ணாவிரதம் ஆரம்பிப்போம்

## இந்து சமயபேரவை செயலர் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ்பெற்ற செல்வச்சந்நிதி, ஆலயதேரை இலங்கை அரசாங்கம் புதுப்பித்துதராவிட்டால் அடியார்கள் திரண்டு குறிப்பிட்ட ஆலயம் முன்பாக உண்ணாவிரதம் அனுட்டிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இந்துசமயப் பேரவை செயலர் சி.சக்திகிரிவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செல்வச்சந்நிதி ஆலயத்தில் தேர்த்திருவிழா அன்று பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற முருகன் அருள் பாமாலை ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்: இலங்கை தீவில்பௌத்த மதம் தவிர்ந்த ஏனைய மதங்களை பேணவேண்டிய தார்மீக ரீதியான பொறுப்பு அரசிற்கு உண்டு.

அவர் தொடர்ந்து கூறுகையில்:

நடைபெற்றுவரும் போரில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஆலயங்கள் பகுதியாக அல்லது முழுமையாக அழிக்கப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகிகள் எமக்கு அறிவித்துள்ளனர்.

தென்மராட்சியில் போர் காரணமாக எமதுஆலயங்கள் இன்று பூசையின்றிப் பூட்டப்பட்டுள்ளன.

ஆலயங்கள்அழிக்கப்படுவதாலும், பூசையின்றிப் பூட்டப்படுவதாலும் நாட்டிற்கும், நாட்டை ஆள்பவர்களுக்கும் தோஷங்கள் ஏற்படும் என்று சமய சாஸ்திரங்கள் செப்புகின்றன.

இதனை விளக்கி அரசுக்கு பலகடிதங்கள் எழுதிவிட்டோம்: நடவடிக்கை எடுப்பதாக பதில் வருகிறது.

ஆலய அழிவுகள் தொடர்கின்றன எமது ஆலயங்கள் என்று அழிபடத் தொடங்கியதோ அன்று தொட்டே நாட்டில் அமைதியின்மை தொடங்கி நாடு அழியும் அளவிற்கு சேதங்கள்தொடர்கின்றன. ஆலயங்களைப் புனரமைப்பதற்கு வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றார்.

பேராசிரியர் சி.க சிற்றம்பலம், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.பாலச்சந்திரன் உட்பட பிரமுகர்பலர் உரையாற்றினர்.

(ச)

## தையல் பயிற்சிகள் ஆரம்பம்

அறவழிப் போராட்டக் குழுவும் பருத்தித்துறை உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து நடத்தும் மகளிர்க்கான நவீன தையல் பயிற்சிநெறி பருத்தித்துறை உழைக்கும் மகளிர் நிறுவனத்தின் சத்துணவுக் கூடத்தில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்பயிற்சி நெறியை பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசாமி சம்பிரதாயபூர்வமாக நாடாவெட்டி ஆரம்பித்துவைத்தார். பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம முதல்வர் ஸ்ரீசித்ரூபானந் சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்தினார்.

(த-77)

## ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் ஏற்புத்தடை ஊசி மருந்து தட்டுப்பாடு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை அரசினர் மாவட்ட வைத்தியசாலையில் ஏற்புத்தடை ஊசிமருந்து இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் ஏற்பு ஊசி மருந்து செலுத்த வேண்டியவர்களை, யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று ஏற்றிக் கொள்ளுமாறு வைத்திய அதிகாரி ரசீது கொடுப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் இவ் ஏற்பு தடை ஊசி மருந்து இல்லாததனால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்று இவ் ஊசியை ஏற்றிக் கொள்வதற்கு போக்குவரத்தில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும்தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 5 மாவட்டவைத்தியசாலைகளில் ஒன்றாகிய ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் இத்தகைய ஊசி மருந்துகள் இல்லாதது குறித்து பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

(செ-75)

## ஈ.பி.டி.பி தலைமை அலுவலகத்தில் கடற்றொழிலாளரின் பிரச்சினை குறித்து விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம், வடமராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளரின் பிரச்சினைகளுக்குதீர்வுகாண்பதற்குரிய விசேடகலந்துரையாடலொன்றுயாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட தலைமை அலுவலகத்தில் அண்மையில் இடம்

இக் கோரிக்கைகள் பற்றிய முடிவுகள் இராணுவத் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு விரைவில் எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுறது.

இதேவேளைஇக் கலந்துரையாடலில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசப் பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர் என்.மதனராஜா. வேலணைப் பிரதேச சபைத்தலைவர் நா. கருணாகரகுருமூர்த்தி ஆகியோர் கலந்

## நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ச.ச.நிலையங்களுக்கு நூல்கள், தளபாடங்கள் அன்பளிப்பு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களில், தெரிவு செய்யப் பெற்ற நிலையங்களுக்கு 1 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களையும்,

அதே போன்று சனசமூக நிலைய நூலகங்களுக்கு 2 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த பயன்தரு நூல்களையும் பொது மக்களின் நலன் கருதி நல்லூர் பிரதேச சபை வழங்கியுள்ளது. பொது மக்கள், பிரதேச சபைத் தலைவர், க. மணிபல்லவராஜனின் சேவையை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

(செ-103)

## கைதாவோர் தொடர்பாக

## வீதி திருத்தம் இல்லை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குபருத்தித்துறை மருதங்கேணி வீதி நீண்ட காலமாக திருத்தப்படாமல் சேதமுற்றுக் காணப்படுகிறது.

இதனால் போக்கு வரத்து செய்யதில் பெரும் சிரமத்தினை எதிர் நோக்கி வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள்

# கைதாவோர் தொடர்பாக மனித கௌரவ மன்றம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகியோரின் விடுதலை தொடர்பாக மனித கௌரமன்றம் நடவடிக்கைகளை யெடுத்துள்ளது.

இம் மன்றத்தின் செயலாளரும், சட்டத்தரணியுமான மகேஸ்வரி வேலாயுதம், தொல்லை தவிர்ப்புக் குழுவினருடனும், சட்டமா அதிபர் திணைக்களத்துடனும் இது தொடர்பாக தொடர்பு கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதன்மூலம் தென்பகுதி சிறைகளிலும் யாழ்ப்பாண சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் பிணையில் செல்வதற்கும், நீதிமன்றத்தில் ஆஜராகி விசாரணையின்பின் விடுவிக்கப்படுவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வழக்குகள் இம்மன்றத்தால் இலவசமாக நடத்தப்படும். மேற்படிவிடயம் தொடர்பான உறவினர்கள், பெற்றோர்கள் இந்த மன்றத்தோடு தொடர்புகொள்ளுமாறு அதன் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (த)

செய்வதில் பெரும் சிரமத்தினை எதிர் நோக்கி வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## தேர்தல் ஆணையர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் வழங்கும் போது சமூகமளித்திருப்பதற்கு முகவர்களை நியமித்தல் தொடர்பான நிகழ்வு இம் மாதம் 18 ஆம் திகதிக்குப்பதிலாக 19 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9.00 மணிக்கு இடம் பெறுமென உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (க-03

மாவட்ட தலைமை அலுவலகத்தில் அண்மையில் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் குருநகர் பாஷையூர், கொழும்புத்துறைப் பகுதிகளில் அதிகாலை 4 மணிமுதல் மாலை வரையும்; மண்டைதீவுக் கடற்கரையிலிருந்து 500மீற்றருக்கு அப்பால் மண்டைதீவு முனைவரையும் இரவு 12 மணிமுதல் காலை 10 மணி வரை தொண்டைமானாறு, கற்கோவளம், குடத்தனைக் கடற்பரப்பில் 5 கிலோ மீற்றர் தூரம் வரையும் மீன் பிடிக்க அனுமதி பெற்றுத் தரவேண்டும் என்று கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப்பிரதிநிதிகள் கோரிக்கைவிடுத்தனர்.

வர் நா. கருணாகரகுருமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-2)

## ஷெல்லினால் காயம்

[வடமராட்சி கிழக்கு]

கொடிகாமம் கச்சாய் தெற்கு பகுதியில் நேற்று வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் ஒருவர் படுகாயமுற்றார்.

கே. ஐயாத்துரை [வயது 61] என்பவரே மேற்படி சம்பவத்தில் காயமுற்றவராவார்.

இவர் சிகிச்சைக்காக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [த-43]



# சுயேச்சைக்குழு இல-3

(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவுடன்)

தொலைபேசியே எங்கள் சின்னம் - மக்கள்

தொல்லைகள் தீர்ப்பது எங்கள் எண்ணம்





(இ-788)

யாழ்ப்பாணம்

## விசிட்டிங் கார்ட் கொடுப்பதில் இப்படியும் ஓர் நடைமுறை

ஒரு வரைச் சந்திக்கச் சென்றால் அவர் வீட்டில் இல்லையென்றால்இன்னார் வந்து போகிறார் என்று சொல்லிவிட்டுவருவார்கள் அல்லது விசிட்டிங் காட்டைக் கொடுத்துவிட்டு வருவார்கள்.

ரஷ்யாவில் ஜார் அலெக்சாண்டர் மகா பலசாலி. அவர் யாரையும் தேடிச் சென்றால் அவர்கள் வீட்டில் இல்லையென்றால் ஒரு நாணயத்தை எடுத்து கடதாசி மடிப்பது போல் விரலால் மடித்து அந்த வீட்டிலுள்ளவர்களிடம் கொடுப்பார் அல்லது மடித்த காசைப் அந்த வீடடில் போட்டுவிட்டு வருவார்.

பின்பு அவ்வீட்டுக் காரர் அந்த நாணயத்தைப் பார்த்து விட்டு யார் வந்து சென்றுள்ளார் என்பதை அறிந்து கொள்வார்களாம் (து)

# பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் ராமதாஸின் கார்மீது தாக்கு

### பொலிஸார் உட்பட 15 பேர் காயம்

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் சென்ற வாகன அணி மீது தாக்கியதில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

புதுச்சேரி அருகே அபுஷேகப் பாக்கம் என்ற ஊரிலிருந்து டாக்டர் ராமதாஸ் சென்று கொண்டிருக்கையில் இந்த சம்பவம் நடைபெற்றது.

1000க்கு மேற்பட்டோர் கொண்ட வன்முறைக் கும்பலொன்று டாக்டர் ராமதாஸ் சென்று கொண்டிருந்த பொழுது கற்களை வீசித்தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தையடுத்து 10க்கும் மேற்பட்டகாவல்துறையினர் உட்பட15 பேர் பலத்த காயங்களுக்குள்ளானார்களென்றும் சிலர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் சம்பவத்தின் பொழுது வன்முறையாளர்களை அடக்குவதற்கு பொலிஸார் ஆகாயத்தை நோக்கி சுட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை டாக்டர் ராமதாஸிற்கு எவ்விதகாயங்களும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து புதுச்சேரி முழுவதும் கதவடைப்புக்கள் நடைபெற்றதாக அரச நிறுவனங்களைத் தவிர ஏனையவை மூடங்கிக் கிடந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## உலக தரிசனம்

## கொமன்வெல்த் அமைப்பிலிருந்து பாகிஸ்தான் நீக்கப்படும்

### ஐ. நா, செயலர் எச்சரிக்கை

(இஸ்லாமபாத்)

கொமன்வெல்த் அமைப்பில் இருந்து நீக்கப்போவதாக பாகிஸ்தானை, அவ் அமைப்பின் தலைமைச் செயலர் கோபி அனான் எச்சரித்துள்ளார்.

மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்தும் வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து உடன் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், கொமன்வெல்த் அமைப்பில் இருந்து பாகிஸ்தானை நீக்கிவிடப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்த முடிவுகளை அடுத்த கொமன்வெல்த் உச்சி மாநாட்டில் பரிந்துரைப்பது தவிரவேறு வழிஇல்லைஎனவும் தலைமைச் செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

### ஐ.நா. கூட்டத் தொடரில்

## இந்திய தரப்பிலிருந்து அறுவர் கலந்துகொள்வர்

(நியூயோர்க்)

ஐக்கியநாடுகள் சபையின் புத்தாயிரமாண்டு சிறப்புக் கூட்டத்தொடரின் வை.கோபாலசாமி உள்ளிட்ட 6பேர் இந்தியாவிலிருந்து கலந்து கொள்வர் என தெரிவிக்கப்படுகிறது.

ஒக்டோபர் மாதம் 16-தொடக்கம் 27 வரை நடைபெற இருக்கும் இம்மாநாட்டில் மறுமலர்ச்சி திராவிடமுன்னேற்றக்கழக பொதுச் செயலர் வை. கோபாலசாமி இந்திய கம்யூனிஸ் கட்சித்தலைவர், இந்திரஜித் குப்தா, காங்கிரஸ், றத்வத் சிங், ஜனதாதன், பிரேம்சிங் பேராசிரியர் உள்ளிட்ட 6 பேரையும் இந்தியப்பிரதமர் வாஜ்பாய் தேர்ந்தெடுத்துள்ளார்.

இம் மகாநாட்டில் கலந்து கொள்ளும் போது சர்வதேசப் பயங்கரவாதம் உள்ளிட்ட 180 பிரச்சினைகளுக்கான விவாதங்கள் நடைபெற்று முடிவுகள் அறிக்கைகளாகக் தயாரிக்கப்படும் என்று நியூயோர்க் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## ஈராக் அதிபருக்கு புற்றுநோய் குவைத் பத்திரிகை தகவல்

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் புற்று நோயால் பீடிக்கப்பட்டிருப்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டிருப்பதாக குவைத் வராந்தப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சதாம் ஹுசேன் புற்று நோயால் பாதிப்புற்றிருப்பதை ஏற்கனவே அறிந்திருந்த போதிலும் கடந்த பெப்பிரவரி மாதமே அமெரிக்க உளவுத் துறையினரால் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருப்பதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இதேசமயம்,

மேற்படி தகவல்களை

## இந்தியா பற்றிய மதிப்பு தற்போது வெகுவாக மாறி வருகிறது

### பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

உலகில் இந்தியாவிற்கு தனியான மதிப்புக் கிடைத்து விட்டதென்று அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்தார்.

அமெரிக்காவில் வைத்து பத்திரிகையாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில்: 1998 இல் இந்தியாவின் அணுகுண்டு சோதனைகளால் உலக நாடுகளிடையே ஏற்பட்ட இந்தியா பற்றிய கணிப்பீடுகள் இப்பொழுது மாறிவிட்டன என்றும் உலக நாடுகளிடையே நல்ல மதிப்பு வாய்ந்த எண்ணம் இந்தியா பற்றி எழுந்திருக்கின்றன வென்றும் தெரிவித்தார்.

மேலும் பத்திரிகையாளர்கள் மத்தியில் அவர் கூறுகையில்; நாட்டின் தேசிய தற்பாதுகாப்புக்காகவே அணுவாயுத சோதனைகளை நடத்தியதாகவும் இதனை உலக நாடுகள் அறியத் தொடங்கிவிட்டன வென்றும் தெரிவித்தார்.

பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தைகள் தொடர வேண்டும் என்ற அடிப்படையிலேயே லாகூர் மூலமாகத்தான் பஸ்ஸில் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டதை நினைவு கூர்ந்தார்.



இப்பொழுது பாகிஸ்தான் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட உடன் படிக்கைகளை மதிக்கவில்லை என்றும் அதனால் இப்பொழுது புதிய உடன்படிக்கைகளை பாகிஸ்தான் அரசுடன் செய்ய முடியவில்லையென்றும் அவர் தெரிவித்தார்:

மேலும் அவர் குறிப்பிடுகையில்: காஷ்மீரை பாகிஸ்தான் பிடிக்கலாம் என்று கனவு காண்கின்றது இது ஒரு போதும் நடக்கப்போவதுமில்லை நடக்கவிடவும் மாட்டோம் என்றும் காஷ்மீர் எல்லைக்குள்ளேயே நமது

## ஈராக் மீதான தடையை நீக்க ஐ.நா. சபையிடம் எகிப்து கோரிக்கை

(பாக்தாத்)

ஈராக் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடைகளை நீக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை எகிப்து கேட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஈராக் மீது ஐ.நா பல தடைகளை விதித்து வந்துள்ளது:

இத் தடைகளை ஐக்கிய நாடுகள் சபை நீக்க வேண்டும் என்று எகிப்து வெளியுறவு அமைச்சர் அமீரடுர்சான் கேட்டுள்ளார்:

வளைகுடாப் போரினால் பெரும் பொருளாதார இன்னல்களுக்குள் மாட்டுப் பட்டிருக்கும் ஈராக்கிற்கு இத்தடை நீக்கம் பெரும் உதவியாக இருக்குமென்று சொல்லப்படுகிறது.

இதேவேளை ஈரக்குவைத் மீது எண்ணெய்த் திருட்டுக் குற்றம் சாட்டியுள்ளதென்று இதனால் நெருக்கடி தோன்றியுள்ளதாகவும் தெரிவித்தார். (து)

## மேற்கு வங்க அரசு உடன் கலைக்கப்பட வேண்டும்

(புதுடில்லி)

மேற்கு வங்க அரசை உடனடியாகக் கலைக்கவேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் பங்காரு லக்ஸ்மன் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டார்:

டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டதென்றும் இதனால் கட்சி மோதல்களும் கொலைகளும் பழிவாங்கல்களும் ஏற்பட்டிருப்பதாக அறியமுடிகிறதென்றும் குறிப்பிட்டார்.

நோயால் பாதிப்புற்றிருப்பது குறித்த விபரங்களை அமெரிக்கா 3 வருடங்களுக்கு முன்

மேற்படி தகவல்களை ஈராக் அரசு முற்றாகவே நிராகரித்துள்ளது. (உ)

கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் மேற்கு வங்கத்தில் சட்

கடந்த 23-ஆம் திகதி மேற்கு வங்க மாநிலத்திற்குச் சென்று நிலைமைகளை ஆராய இருப்பதாகவும் பங்காரு லக்ஸ்மன் தெரிவித்தார்.

இதேவேளை மத்திய அரசு 356 இலக்க சட்டத்தின் கீழ் மாநில அரசைக் கலைக்க வேண்டுமென்றும் அல்லது வேறு வழிகளைக் கையாள வேண்டிவரும்என்றும்பங்காரு லக்ஸ்மன் தெரிவித்தார்.

(து)

எல்லைக்குள்ளேயே நமது வீரர்கள் நின்று கொண்டு, மிகவும் நிதானத்துடனேயே இந்தியா செயற்படுகிறது என்றும் வாஜ்பாய் தெரிவித்தார்.

இதேவேளை இந்தியாவின் தலைப்புதல்வர் மகாத்மாகாந்தியைக் கௌரவிக்கும் முகமாக அவரின் சிலை திறப்பு விழாவில் அமரிக்க அதிபர் கலந்து கொண்டது நாம் மதித்துப்போற்றும் நற்பண்பு என்றார். (க-து)

# புதுவித சிறுநீரக நோயினால் சவூதியில் 30 பேர் பலியாகினர்

(றியாட்)

புதுவகை சிறுநீரக நோயினால் சவூதி அரேபியாவில் திடீரென 30பேர் இறந்துள்ளனர், என அறிவிக்கப்படுகிறது.

சவூதி அரேபிய தென்மேற்குப் பகுதியில் இந்த திடீர் சம்பவங்கள் நடைபெறுவதையடுத்து வைத்தியபகுதி உசார் நிலைக்கு வந்து அவசரம் அவசரமாக வைத்திய பரிசோதனைகளும் தடுப்பு முறைகளும் மேற்கொண்டுவருகிறது.

சோமாலியாவிலிருந்து அண்மையில்சவூதிக்கு இறக்குமதி செய்யப்பட்ட செம்மறி ஆடுகளால் இந்த அதி தீவிர சிறுநீரக நோய் பரவியிருக்கலாமென்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து பெற்ற இரத்தம், சிறுநீர் போன்றவற்றை லண்டன் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# முஸ்லிம் தீவரவாதிகள் மீது அரச படைகள் தாக்குதல்

## கோலோ தீவில் சம்பவம்

(மணிலா)

கோலோ தீவில் அமைந்துள்ள முஸ்லிம் தீவிரவாதிகளின் முகாங்கள் மீது அரச படைகள் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதாக பிலிப்பைன்ஸ் அரசு அறிவித்துள்ளது.

மேற்படி கோலோ தீவிரவாத அமைப்பினர், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை பணயமாகப் பிடித்து, அவர்களின் விடுதலைக்காக பெருந்தொகையான பணத்தைக்கோரி வருவது தெரிந்ததே.

இந்த நிலையில், இவர்களது நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்கும் நோக்கமாக யுத்தம்ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், இனி பேச்சு வார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை எனவும் பிலிப்பைன்ஸ் அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இதே சமயம், மேற்படி கோலோ தீவிரவாதிகள் தற்போது 19 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை பணயமாக பிடித்து வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# போதைவஸ்து பாவிக்கமாட்டோம் ஒலிம்பிக் வீரர்கள் சத்தியம்

(அவுஸ்ரேலியா)

அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில்கடந்த 15 ந்திகதி ஆரம்பமான ஒலிம்பிக் போட்டியில் ஒலிம்பிக் வீரர்கள் புது விதமான சத்தியப்பிரமாணமொன்றை எடுத்துக் கொண்டனர்.

போதைவஸ்துக்களைத்தாம் பாவிப்பதில்லையெனவும், போட்டிகளின் போது மதுபானம் பாவிக்க மாட்டோம் என்றும் உறுதி கூறுகின்றோம். என அச் சத்தியப் பிரமாணம் அமைந்திருந்தது.

கடந்த காலங்களில் ஒலிம்பிக் வீரர்கள் போதைவஸ்துப் பாவித்து விட்டு போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள் எனப் பலதரப்பட்ட குற்றச்சாட்டுகள் எழுந்ததையடுத்தே இப்புதிய சத்தியப் பிரமாண முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ந)

சனவினும் இன்னாது
மலனோ வினைவேறு
சொல்வேறு பட்டார்
தொடர்பு
- குறள் -

# வலம்புரி

## பூச்சியத்தில் இராச்சியம்

புலருகின்ற தேர்தல் திருவிழாக்களில் மனித வாழ்வின் முக்கிய இலக்கை மறந்து பூச்சாண்டி காட்டும் போக்கை நினைத்தால் வேதனை கலந்த சிரிப்புத் தான் வரும். நாங்கள் கொடுத்த விலை நாலுலகும் அறிந்த தொன்று. இழப்பதற்கு இனியொன்றுமில்லை என்னுமளவிற்குத் தமிழன் ஒட்டாண்டியாகிய வேளையில் நிவாரண அரிசி சாமானும், அங்கொன்றும் இங்கொன்றுமான உறுதி மொழிகளும் மக்களை மயக்க முனைகின்றன. இவையல்ல தமிழனின் இலக்கு. அவன் இருந்த செழுமைக்கு ஈடாகமாட்டா.

முழந்தாளிட்டுக் கொண்டு உயிருடன் இருப்பது தகாது. உப்பரிகை வாழ்வானாலும் சுதந்திரம் துளிர் விடவேண்டும் என்ற தன்மான உணர்வு மேலோங்கியகாலம் ஒன்று இருந்தது. அந்த வேட்கையின் இலக்கை அடைய பட்டதுன்ப துயரங்களை அசை போட வேண்டும். அவற்றிற்கு ஈடாக எங்கள் பயணத்தை எடுத்துச் செல்ல வேண்டும். எந்தப் புல்லுருவிகளும் எம்மை ஏமாளிகளாக்கக்கூடாது.

பயணம் வெற்றிக் கம்பத்தை நாடிச் செல்லும் வேளை இது. வேதனைகளும், சோதனைகளும் சுதந்திரத்தின் சுகத்திற்கு ஒரு பொருட்டல்ல. எங்கள் வாழ்வும் வளமும் சுதந்திரத்தின் சுருதியிலே தான். அப்பாடா காலம் காலமாக கோமாளிக்

# பெண்களை அச்சுறுத்தும் மார்பகப் புற்றுநோய்

## மீள்வதற்குவழியின்றித்தவிக்கும் அபாக்கியவதிகள்

### மருத்துவ விளக்கம்

முன்னேறி வரும் விஞ்ஞான உலகில் கூடுதலாக அரைமில்லியனுக்கும்கூடுதலான பெண்களை குறிப்பாக நடுத்தர வயதுப் பெண்களை இப் புற்று நோயானது தாக்குகின்றது. இந்நோயானது யாழ்ப்பணத்திலும் பரவலாகக்காணபடுவதாக ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன. பொதுவாக இப்புற்றுநோய் உள்ளவர்களுக்கு சூலகங்களின் கட்டுப்பாடற்ற வளர்ச்சி, கலங்கள் அசாதாரணமாகபெருக்கமுறுதல், கலங்களில் இருந்து ஒட்சிசன் அகற்றப்படுதல் போன்றவை காரணமாக உடல்மெலிவு, களைப்பு, சோர்வு போன்ற அறிகுறிகள் ஏற்படுகின்றன.

இந்நோய் உருவாவதற்கு பலகாரணிகள் ஏதுவாகஅமைகின்றன. அவை வருமாறு.

1. 45வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கே இந்நோய் ஏற்படுகின்றது குறைந்த வயதினருக்கு பெரும்பாலும் ஏற்படுவதில்லை.

2. குடும்பத்தில் யாருக்காவது இந்நோய் காணப்படின் அவர்களின் பரம்பரையில் வரும் பெண்களுக்கு ஏற்படக் கூடிய வாய்ப்பு சிறிதளவு காணப்படுகிறது.

3. கொழுப்புணவு, மதுபானம் போன்றவற்றை கூடுதலாக பாவிக்கும் பெண்களை இந்நோய் பீடிக்கிறது.

4. பிள்ளைகள் இல்லாத அல்லது பிரசவித்துக் கொள்ளாத தாய்மாரையும்பாலூட்டாத தாய்மாரையும் இந்நோய் அதிகளவில்பீடிக்கிறது.

#### இந்நோய்க்கான அறிகுறிகள்

1. மார்பகத்தின் வடிவம் அளவு என்பனவற்றில் ஏற்படும் உருவமாற்றங்கள்

2. நோயற்ற கெட்டியான கட்டிகள் காணப்படும். பொதுவாக இவை மார்பின் வெளிப்புறம் மேற்புறப்பகுதிகளில் காணப்படும்.

3. தோலானது சிவப்பாக இருந்து பின்னர் படிப்படியாக நிறமாற்றமடைந்து காணப்படுவதுடன் மாறாத புண்களும் காணப்படும்.

4. மார்பகத்தின் தோலானது இழுக்கப்பட்டு உள்வாங்கி இருக்கும்.

5. கமக்கட்டு நிணநீர்முடிச்சுகள் என்பன வீங்கிஇருத்தல்

6. முலைகாம்பைச் சுற்றியுள்ளபகுதி சிவப்பாக மாறிஇருத்தல்.

7. மார்பகப் பகுதி இறுக்கமாக காணப்படும்.

8. முலைக்காம்பு உள் இழுக்கப்பட்டு இரத்தம் வெளியேறலாம்.

இத்தகைய அறிகுறிகள்உள்ளவர்களுக்கு மூதுகுநோ, கால்நோ, உடற் சோம்பல் நிறைகுறைதல் சுவாசிப்பது கடினம், தோலில் சிறுகழலைகள் காணப்படல் போன்றன காணப்படும். இவர்கள் இதை கவனக்குறைவாக விடாது உடனடியாக சென்று வைத்திய ஆலோசனையை பெறுதல் வேண்டும். இவ்வாறு ஆரம்பத்தில் சிகிச்சை செய்யாது கவனக்குறைவாகவிடின் அது உடலின் ஏனைய பகுதிகளுக்கும் பரவி உடலின் வேறு பகுதிகளிலும் நோயை ஏற்படுத்தும். பெரும்பாலும் இதன் காரணமாக நுரையீரல் தைரொயிட் சுரப்பி முள்ளந்தண்டென்பு, ஈரல், கால்என்பு போன்றன பாதிப்புக்குள்ளாகின்றன. இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டால் நோயாளிக்கு மரணம் சம்பவிப்பது உறுதியாகும்.

இவற்றை கண்டறிவதற்கு ஒவ்வொரு பெண்களும் சுயமாகவே பரிசோதனைகளை செய்து கொள்ளலாம். இதனை மாதவிடாய் வந்து ஒருவாரத்தின்பின் பரிசோதித்தல் சிறந்தது.

#### பரிசோதிக்கும் முறைகள்

1. மாதவிடாய் வந்து ஒரு வாரத்தின்பின் கைகளை வைத்துகொண்டு மார்பகங்களில் ஆடைகள் அற்றநிலையில் இருமார்பகங்களையும் கண்ணாடியில் அவதானிக்க வேண்டும்.

2. மார்பகங்களின் பரிமாணம் சமமாக உள்ளதா இருமுலைக் காம்புகளிலும் ஏதாவது மாற்றங்கள் உள்ளனவா மார்பகங்கள், முலைக் காம்புகள் இரண்டும் ஒரே மட்டத்தில் உள்ளனவா, முலைக்காம்பு மார்பகத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதா என அவதானிக்க வேண்டும்.

3. முலைக்காம்பை சுற்றியுள்ள பகுதியில் தோலில் மாற்றமோ அல்லது தோல் உள்வாங்கப்பட்டுள்ளதா, முலைக்காம்பில்இருந்து இரத்தம் அல்லது வேறுதிரவம் வடிகின்றதா என அவதானிக்க வேண்டும்.

4. மார்பகங்களில் கட்டிகள், மாறாத புண்கள் என்பன காணப்படுகின்றனவா என அவதானிக்க வேண்டும்.

5. கமக்கட்டு, நிணநீர் முடிச்சுகளை அழுத்தி அவற்றில் ஏதேனும், நோ, வீக்கம் கட்டிகள் இருக்கின்றனவா என அவதானிகக வேண்டும்.

ஏனைய புற்று நோய்களை காட்டிலும் இந் நோயானது ஆரம்பத்தில் கண்டுபிடித்து சிகிச்சை செய்யாவிடின் மிகுந்த பாதிப்பை கொடுக்கும். மார்பகப் புற்றுநோய்களை இலகுவாக கண்டறிய மேலை நாடுகளில் Mammography எனும் கருவி பயன்படுகிறது. புற்று நோய் மார்பினை மட்டும் பாதித்த நிலையில் மார்பு அனைவை சிகிச்சை (Radical Mastectomy மூலம் அகற்றலாம். ஏனைய பகுதிகளுக்கும் பரவின் Radiotherapy எனும் முறைமூலம் நோயை கட்டுபடுத்தலாம் இல்லாவிடில் Chemotheraphy எனும் ஊசிமூலம் கொடுக்கப்படும் ஓமோன் சிகிச்சை அல்லது இழைய எதிர் மருந்து சிகிச்சை மூலம் கட்டுப்படுத்தலாம்.

**குணசீலன் கஜேந்திரன்** நல்லூர்

# அமைச்சர் அஷ்ரப்பின் மரணத்தில் பலத்த சந்தேகமாம்

## ஜனாதிபதிக்கு அவசர மகஜர்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும அமைச்சருமான அஷ்ரப் பயணம் செய்த உலங்குவானூர் தி விபத்துக்குளளானது குறித்து தீவிர விசாரணை நடத்திஉண்மை நிலையினை அறியத்தர வேண்டும்.

இவ்வாறு கோரும் அவசர பக்ஸ் செய்தி ஒன்றினை அட் ளார்.

அமைச்சர் அஷ்ரப் பயணம் செய்த உலங்குவானூர்த்தி விபத்துக்குள்ளானதாக அறிவிக்கப் பட்டபோதிலும் அவரது மரணத்தில் எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

அமைச்சர் வழமையாக பயணம் செய்யும் ஆகாய பாதை மாற்றப்பட்டு புதிய

## சிப்பாய் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள வைக்கெல்லைப்பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியானதுடன இரண்டு பேர் காயமடைந்தனர். (ந)

**பயண அனுமதி...**

# இராசி பலன்

19/ 09 / 2000
(பூரட்டாதி 3 செவ்வாய்)
சஷ்டி மு. இ 9.03 வரை
கார்த்திகை பி ப. 12.55 வரை
இராகுகாலம்
3.02-4.32
சுபநேரம் -10.32- 12.02

**மேடம்**
நியாய வாதம், காரிய அனுகூலம், பணச் செலவு.

**இடபம்**
உடல் ஆரோக்கியம், தெவிவானசிந்தனை, எதிர்பாராத மனஸ்தாபம்.

**மிதுனம்**
சயனசுகக்குறைவு, காரிய

தான். அப்பாடா காலம் காலமாக கோமாளிக் கூத்துக்கு ஏமாளிகளா னது போதும். இன்று புதி தாய்த் தோன்றினோம் என்ற எண்ணக்கரு தோன்றி மூன்று தசாப் தம் வரை ஆனது.

அந்த வேட்கையின் இலக்கை அடைய நந்தி போலாகக் கூடாது.

தமிழ் மக்கள் கட்டி எழுப்பப் போகும் வாழ் வியல் சுதந்திரத்தின் அடித்தளத்திலேயாகும். வீறு கொண்ட உயிர் கொடை வள்ளல்களுக்கு அது நாட்டமுமாகும் வெட்ட வெட்டத் தழைப் பவன் தமிழன். ஒன்று மற்ற நிலையிலும் தன் னம்பிக்கை இழக்காத வன். ஊக்கமுள்ள பிர கிருதி, ஏக்கமென்பது அவனுக்கு பகற் கனவு, மண்ணின் பாசமென்பது மாறாப்பசி, பசி தீருமட் டும் எதனையும் நாடோம், எங்கும் ஓடோம்.

**அன்புடன் ஆசிரியர்**

---

இவ்வாறு கோரும் அவசர பக்ஸ் செய்தி ஒன்றினை அட் டாளைச் சேனை பிரதேச சபையின் முன்னாள் பிரதி தவிசாளரும் முஸ்லிம் காங்கி ரஸ் மத்திய குழு தலைவரு மான உமர்லெப்பை ஜனாதி பதி சந்திரிக்கா குமாரதுங்கா வுக்கு அனுப்பி வைத்துள்

பயணம் செய்யும் ஆகாய பாதை மாற்றப்பட்டு புதிய ஆகாயப் பாதையால்பயணம் செய்தமை குறித்த காரணம் அறிவிக்கப்படவில்லை இது எமது சந்தேகத்தை வலுப்ப டுத்துவதாக உள்ளது எனவும் அப் பக்ஸ் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரி 150ஆவது ஆண்டுவிழா பிரான்சில்

(சுண்டுக்குளி)

யாழ்.நகரின்பிரபலகல்லூரி யாழ். புனித சம்பத்திரிசி யார் கல்லூரியின் யின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவை பிரான்ஸ் நகரில் உள்ளலயன் சிற்றியில் வெகு சிறப்பாக கொண்டா டப்பட்டுள்ளது.

இந்நகரிலுவள இக்கல்லூரி யின் பழைய மாணவர் களால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஒழுங்கு செய்யப்பட்டது இந்நிகழ் விற்கு எஸ்.தங்கராஜா தலை தாங்கினார். பிரதமவிருந்தி னராகவணபிதா எஸ்.செபஸ் ரியன் அடிகளார் கலந்து கொண்டார்.

இதனையொட்டி பத்திரிசி யன் அணிக்கும், வட்டுக் கோட்டை யாழ்ப்பாண பழைய மாணவர் அணிக்கு மிடையில் சிநேகபூர்வ துடுப் பாட்டபோட்டி நடை பெற் றது.

40 பந்து பரிமாற்றங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்ட இப் போட்டியில் பற்றீசியன் அணி வெற்றியீட்டியது.

இந்நிகழ்வின் ஒன்று கூட லில் புனித சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ். வட்டுக் கோட்டை, யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இறுதியில் இடம்பெற்ற கலைநிகழ்ச்சியின் போது பற் றீசியன் கல்லூரியினால் இப் பாடசாலை வரலாறு நாடகமாக அரங்கேற்றப் பட்டது. (க-110)

---

## பயண அனுமதி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 147112 ஏ | 125222 ஏ |
| 155254 ஏ | 148941 ஏ |
| 158941 பி | 160607 ஏ |
| 160607 பி | 160607 சி |
| 160690 ஏ | 160690 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 144974 ஏ | 144974 பி |
| 144974 சி | 156845 ஏ |
| 157215 ஏ | 157249 ஏ |
| 257249 பி | 167431 ஏ |
| 157431 ல | 157431 சி |
| 157453 ஏ | 157454 ஏ |
| 157492 ஏ | 157492 பி |
| 157492 சி | 157492 டி |
| 157622 ஏ | 157625 ஏ |
| 157643 ஏ | 157643 பி |
| 157643 சி | 157643 டி |
| 15766 ஏ | 157662 ஏ |
| 157662 பி | 157662 ஈ |
| 157670 ஏ | 157670 பி |
| 157679 ஏ | 157679 பி |
| 157684 ஏ | 157684 பி |
| 146967 ஏ | 146967 பி |
| 146967 சி | 157716 ஏ |
| 157716 பி | 160546 ஏ |
| 160636 ஏ | 160636 பி |
| 160636 சி | 160797 ஏ |
| 160845 ஏ | 160845 பி |
| 160845 சி | 160882 ஏ |
| 160882 பி | 160882 சி |
| 161567 ஏ | 161567 பி |
| 161586 ஏ | 161587 ஏ |

(க)

---

**மிதுனம்**

சயனசுகக்குறைவு, காரிய நட்டம், சகோதரர் உதவி.

**கடகம்**

பணவரவு, நினைத்த காரி யம் கை கூடும், கீர்த்தி.

**சிங்கம்**

தொழில் மேன்மை, பிர யாணம், மனக்கிலேசம்.

**கன்னி**

உறவினர் மனஸ்தாபம், வீண்பயம், பணச் செலவு.

**துலாம்**

நண்பர்கள் விரோதம், வியாதி, பணவரவு.

**விருச்சிகம்**

விருந்துபசாரம், சுவாரஸ் யம், பிரயாணம்.

**தனுசு**

சந்தோசமான செய்தி, புதிய தொழில் முயற்சி, காரிய வெற்றி.

**மகரம்**

குடும்பக் கவலை, இறு வியாதி, தடுமாற்றம்.

**கும்பம்**

வாகன சுகம், தாய் வழி உறவு, நண்பர்கள்விரோதம்.

**மீனம்**

பிரயாணம், பணவரவு, குடும்ப சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

யாழ்ப்பாணம் நூலகத்துறைப் படிப்பகம்

# தேர்தல் தினமான 10- ம்திகதி வரை

# யுத்தத்தை நிறுத்தி வைக்கவும்!

## ரணில் ஜனாதிபதிக்குப் "பக்ஸ்" செய்தி

(கொழும்பு)
ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதிபொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதால் தேர்தல் காலத்தில் உடனடியாக யுத்தத்தைநிறுத்தி அமைதிபேண அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர 'பக்ஸ்' செய்தியில் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது நடைபெற்று வரும் யுத்தம் தொடர்பாக தமிழ் மக்கள் அருவருப்பும் வேதனையும் அடைந்திருப்பதால் அவர்கள் அமைதியாக வாழ்வதற்கு உடனடியாக யுத்தத்தை நிறுத்த வேண்டுமென்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் தேர்தலில் நிற்கும் வேட்பாளர்கள் கேட்டுக் கொண்டதை அடுத்தே ஜனாதிபதியை ரணில் வற்புறுத்திக் கேட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## அஷ்ரப்பின் அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றார்

(கொழும்பு)
ஹெலி விபத்தில் கொல்லப்பட்ட அமைச்சர் அஷ்ரப் வகித்த துறைமுகங்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று முதல் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் இந்த அறிவிப்பு எதிர்வரும் பொதுத்தேர்தலை வெகுவாகப் பாதிக்கும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைத் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இணைத் தலைவர் ரவூப்ஹக்கீம் நேற்று கட்சித் தலைமையகத்தில் பத்திரிகையாளர் மகாநாடொன்றை நடத்தினார் அம்மாநாட்டில் மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது.

அமைச்சர் அஷ்ரப் கொல்லப்பட்டமை விபத்தல்லவென்றும் அதுஒருசதி முயற்சி என்றுசந்தேகிப்பதாகவும், இது சம்பந்தமாகவிசாரணை ஒன்றை நடத்துமாறு அரசைக்கோரியுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை விசாரணைகளை மேற்கொள்ள ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவரை தலைவராக நியமித்துள்ளதாகவும் அம்மாநாட்டில் தெரிவித்துள்ளார் (வ)

### உரும்பிராயில்...

வர்என அவரின் விசேட அடையாள அட்டை மூலம் அறிய வந்துள்ளது.

இவரது சடலத்தை கோப்பாய் பொலிஸார் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இதேவேளை சோதனைச் சாவடியில் மறித்த போது குறித்த இளைஞர் நிற்காமல் சைக்கிளைப் போட்டுவிட்டு ஓடியதாகவும் அதன் போதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் படைத்தரப்பினர் அறிவித்துள்ளனர். (ந)

### குண்டு...

றைக்கு எடுத்துச் சென்று தாஜ் மகால்சந்தி சோதனைச் சாவடியில் வைத்து குண்டை செயலிழக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதே குண்டு வெடித்து வாகனம் சிதறியது.

இச் சம்பவத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உட்பட இரு பொலிஸாரும் ஏற்னவே தாசகாரப்பிரிவில்சரணடைந்திருந்த இளைஞர் ஒருவரும் கொல்லப்பட்டனர். ஏழு படையினர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக 4பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ந-2)

### ஒருவரை...

வர்களின் சடலங்களை அடையாளம் காணமுடியாத நிலையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### தமிழ்...

ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

ஜேர்மனியின் ''மோஸ்'' சிறைச்சாலைக்கு முன்பாகக் கடந்த 4ம் திகதி முதல் நடைபெறும் இப்போராட்டத்தில் பொன்னையா குணசிங்கம் (வயது 27), நாகராஜா இராஜகாந்தன் (வயது 28), சோமசுந்தரம் சுந்தரலிங்கம் (வயது 31), தம்பிராஜா மருதேஸ்வரன் (வயது 34) ஆகிய தமிழ் இளைஞர்களே இந்த சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை நடத்தி வருகின்றனர்.

ஜேர்மனியில் உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்றுக்காலை 10-00 மணி முதல் இச்சுழற்சி முறையிலான சத்தியாக்கிரகம் நடைபெறுகிறதுஎன்றும்இவர்களின் போராட்டத்திற்கு அனைத்து ஜேர்மனி வாழ் தமிழர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

### மனித உரிமைகள்...

ஜந்த திஸநாயக்காவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் அட்டைகளில் ஒட்டுவதற்காக அச்சடிக்கப்பட்ட ஸ்ரிக்கர் விவகாரம் தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சட்டத்தரணி ஆனந்த குணதிலக மனித உரிமைகள் ஆணைக்குழு முன் முறைப்பாடு செய்ததை அடுத்தே தேர்தல் ஆணையாளரை மனித உரிமைகள் ஆணைக்குழுமுன் ஆஜராகுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

### டிப்ளோமா பெறுபேறு வெளியாகியது

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழக கல்வியியல் டிப்ளோமா பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

இது பற்றிய விபரங்களை பல்கலைக்கழக பட்ட மேற்படிப்பு உயர் பீடத்தில் பார்வையிடலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### இராணுவ...

பில் இருந்து தாக்குதல்களை மேற்கொள்ள படைமுகாம்களிலிருந்து பலத்த எறிகணைத் தாக்குதல்களும், பல்குழல் பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையை எதிர்த்து விடுதலைப்புலிகள் பலத்த எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்டனர். இத்தாக்குதலின் போதே இராணுவத்தரப்பில் 18இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 20 இராணுவத்தினர் காயமடைந்துமுள்ளனர். காயமடைந்த இராணுவத்தினருக்கு பலாலி இராணுவ வைத்தியசாலையில் உடனடியாக சிகிச்சை வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தைத் தீவிரப்படுத்தி முன்னெடுத்துச் செல்லப் போவதாக பிரதமரும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும் சூளுரைத்துள்ளனர்.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த இராணுவத்தளபதிகளுடன் தொடர்பு கொண்டு யுத்த முனை தகவல்களை உடனுக்குடன் அறிந்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை இராணுவத்தினர் தாம் கைப்பற்றிய பகுதிகளைப் பலப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

27ஆவது ஒலிம்பிக் போட்டி

## பெண்களுக்கான படகோட்டத்தில் செக்.குடியரசிற்கு தங்கப்பதக்கம்

(கொழும்பு)
சிட்னி ''ஹோம்போஸ்பே'' மைதானத்தில் நேற்று நடைபெற்றபெண்களுக்கான தனிநபர் படகோட்டப்போட்டியில் ''செக் குடியரசு'' தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளது

இதேவேளை ஒலிம்பிக் போட்டியின் மூன்றாவது நாளான நேற்றுசைக்கிள் ஓட்டம்ரேபிள்ரெனிஸ் ஜிம்னாஸ்ரிக், குத்துச்சண்டை, நீச்சல், மற்றும் கூடைப் பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் நடைபெற்றுள்ளன, நேற்றுவரை அமெரிக்கா 6 தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)

## அஷ்ரப்பின் மனைவி இணைத் தலைவரானார்

(கொழும்பு)
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைத் தலைவர்களாக விபத்தில் கொல்லப்பட்ட அமைச்சர் அஷ்ரப்பின் மனைவியும், ராவூப்ஹக்கீமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ரவூப்ஹக்கீம் கிழக்கு முஸ்லிமாக இல்லாத காரணத்தினாலேயே அவருக்குதலைமை பதவி வழங்க வில்லை என காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை அமைச்சரின் மனைவி, சமய ஆசாரப்படி மூன்று மாதங்களுக்கு பொது விடயங்களில் பங்குபற்றுவது தவிர்க்கப்பட வேண்டுமென்பதால் தற்காலிகமாக இணைத்தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பின் அவர் தலைவராக தெரிவு செய்யப்படலாம் என்றும் தெரியவருகிறது. (வ)

## மீனவர்கள் பத்துப் பேர் படையினரால் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாக் கடலில் மீன் பிடிக்கச்சென்ற பத்து மீனவர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு படையினரால் அனுமதி மறுக்கப்பட்ட கடல் பகுதிக்குள் மீன் பிடிக்கச் சென்ற போதே இம் மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும்இவர்களின்விடுதலை தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை என்றும் விசேட ஊடக தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ந-4)

## நீதிமன்றத்தால் நால்வர் விடுதலை

(யாழ்ப்பாணம்)
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மூவர் யாழ் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்:

சுப்பிரமணியம் மார்க்கண்டு ஒடக்கரை வீதி குருநகர், யோன் பிரான்சிஸ் யாழ்ப்பாணம், சின்னத்தம்பி அன்பரசன் புதிய செம்மணி வீதி கல்வியங்காடு ஆகியோர் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை சினிவாசகம் வீதி கொட்டடியைச் சேர்ந்த தியாகராஜா குகதாசன் என்பவரை யாழ் நீதிமன்றம் பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளது. (ந-12)

## இளைஞனைக் காணவில்லை

(இருபாலை)
கடந்த 9ந்திகதி வெள்ளாம் போக்கடி கொடிகாமத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து வெளிக்கிட்ட கனகசிங்கம் சிவகுமார் (வயது21) என்பவர் இதுவரை வீடு வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகிது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது மேற்படி நபர் வீட்டிலிருந்துபுறப்பட்டு கோப்பாயில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்குசெல்வதாக கூறியதாகவும்ஆனால் அவர் கோப்பாய்க்கு வரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-2)

## தபால்கள் நாளைவரும்

(யாழ்ப்பாணம்)
யாழ்குடா நாட்டுக்கான வெளியூர்த் தபால் பொதிகள் நாளை செஞ்சிலுவைச் சங்க கப்பல் மூலம் எடுத்து வரப்படவுள்ளது.


இதே வேளை எதிர் வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் யாழ் தேர்தல் திணைக்களத்தால் யாழ் தபாலகத்தில் ஒப்படைக்கப்படவுள்ளன.

இடம்பெயர்ந்தவாக்காளர்களுக்கு அவர்கள் செறிவாக வாழும் பகுதிக்கு அருகில் உள்ள தபால் நிலையங்களுக்கூடாகமேற்படி அட்டைகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, (ந-3)


உரிமைக்கு குரல் கொடுப்போம்-மக்கள்
உறவுக்கு எங்கள் கரம் கொடுப்போம்!
விடியலுக்கு உயிர் கொடுப்போம்-மக்கள்
விழிநீரை நாமே துடைத்தெடுப்போம்!
அளித்திடுவீர் உங்கள் வாக்குகளை
வீணைச் சின்னத்திற்கே!

(ஈ. பி. டி. பி)

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!



(இ/736)

ஈ. பி. டி. பியின் ஏற்பாட்டினால் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் கோயில் புனரமைப்புக்கு தலா 140 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.


இப்பத்திரிகை ''வலம்புரி'' அச்சகத்தாரால் இல. 18, வேம்படித்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில்2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.